# இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல்

## ஆண்டறிக்கை -2025

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0004 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2020 செப்டம்பர் |
| அறிக்கையிடல் காலம் | 2025 ஜனவரி - 2025 டிசம்பர் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | சரவணன் நடராசா, மயூரநாதன் இரத்தினவேல், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |

முன்னோர் ஆவணகம்

நூலக நிறுவனம் 1900-க்கு முன் வெளிவந்த இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்களின் முக்கிய ஆவணங்களை பட்டியலிட்டு, பாதுகாத்து, அணுக்கப்படுத்தும் நோக்கில் “முன்னோர் ஆவணகம்” என்ற செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இந்த செயற்பாட்டின் கீழ்:

- இலங்கை தொடர்பான அரசு வெளியீடுகள், வருடாந்த அறிக்கைகள், பாராளுமன்ற விவாதங்கள், கையெழுத்துப் பிரதிகள், காலனித்துவ அச்சுப்பிரசுரங்கள், ஒளிப்படங்கள், வரைபடங்கள், ஓலைச்சுவடிகள், மற்றும் வேற்றுமொழி ஆவணங்கள் ஆகியவை எண்ணிமப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்படுகின்றன.

உள்ளடங்கும் படைப்புக்கள்

- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பில் தற்போது கிடைக்கும் படைப்புக்களும், கிடைப்பதற்கு அரிதான படைப்புக்களும்.
- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான விடயங்களை முழுதாகவோ, பகுதியாகவோ கொண்டவை.
- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் பயன்பாட்டுக்காக வெளியிடப்பட்டவை.
  - இலங்கைத் தமிழ் பேசும் சமூக உறுப்பினரால் ஆக்கப்பட்டவை
  - பிறரால் ஆக்கப்பட்டவை
- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் பற்றிப் பிறரின் பயன்பாட்டுக்காக ஆக்கப்பட்டவை.
  - இலங்கைத் தமிழ் பேசும் சமூக உறுப்பினரால் ஆக்கப்பட்டவை
  - பிறரால் ஆக்கப்பட்டவை

**2025 ஆண்டிற்கான செயற்றிட்ட நோக்கம் மற்றும் இலக்குகள்**

இலக்கு

1900க்கு முன் வெளிவந்த இலங்கைத் தமிழ் சமூகத்தின் அரிய வரலாற்று ஆவணங்களை உலகளவில் அடையாளம் கண்டறிந்து, எண்ணிமப்படுத்தி, நூலக விஞ்ஞான நியமங்களுக்கேற்ப வகைப்படுத்தி, இலவச அணுக்கத்திற்கு வழங்குதல்.

நோக்கங்கள்

- ஆவணங்களை அடையாளம் காணல்
- 1,080 ஆவணங்கள் சேகரித்தல்
- 95% எண்ணிமப்படுத்தல் (90% மீதரவுடன்)
- அனைத்து ஆவணங்களையும் இலவச அணுக்கத்திற்கு வழங்குதல்

**2025 ஆண்டு மொத்த அடைவுகள்**

- 2025 ஆம் ஆண்டு இது வரையில் 1,704 முன்னோர் ஆவணகங்கள் பதிவேற்றப்பட்டுள்ளன.
- இதில் 104 பல்லூடக ஆவணங்கள் பல்லூடக ஆவணகப்பக்கத்தில் முன்னோர் ஆவணங்களாக இணைக்கப்பட்டுள்ளன.
- பேராதனை நூலக Koha மென்பொருள் மூலம் 9 முன்னோர் ஆவணங்கள் இனங்காணப்பட்டு, எமது பணியாளரால் அவை எண்ணிமப்படுத்தப்பட்டு எமது வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.
- 1889 -1900 வரையான Government Gazette அனைத்தும் முழுமையாக முன்னோர் ஆவணகப்பக்கத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.
- ஈழத்து சுவடிகள் ஆவணமாக்கல் செயற்றிட்டம் இணைப்பும், முன்னோர் ஆவணக முகப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**2025 ஆண்டு பதிவேற்றப்பட்ட ஆவணங்கள்**

| ஆவண வகை | ஆண்டுகள் | பதிவேற்றங்கள் |
|---|---|---|
| **Ceylon Government Gazette** | **1896,1899,1900** | **06** |
| **The Ceylon Government Gazette** | **1892–1895,1898** | **13** |
| **Ceylon Government Gazette Extraordinary** | **1899,1900** | **02** |
| **Supplement To The Ceylon Government Gazette** | **1889–1900** | **868** |
| **Police Weekly Circular** | **1889–1893** | **115** |
| **The Hue And Cry** | **1891–1899** | **185** |
| உதய தாரகை **Morning Star** | **1897–1899** | **69** |
| **Royal Commonwealth Society Photograph Collection** | **1880** | **61** |
| **Colonial Postage Stamps** | **1886–1899** | **29** |
| **British Colonial Coins** | **1886–1899** | **02** |
| **Sri Lanka's Map** | **–** | **05** |

பதிவேற்றப்பட்ட ஆவணங்கள் பற்றிய ஆய்வு விபரங்கள்

- **Supplement To The Ceylon Government Gazette** எனும் அறிக்கைகள் இலங்கையின் முக்கிய புள்ளிவிபரங்களை கொண்டதாக காணப்படுகிறது. உதாரணமாக காணிகளின் விபரங்கள் மற்றும் அவற்றை வாங்கியுள்ளோர் விபரங்கள், கழிவு நிலங்கள் கட்டளைகளின் கீழ் அறிவிப்புகள் ஆகியவற்றை கொண்டதாக காணப்படுகின்றன.
- Police Weekly Circular என்பது 19ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் இலங்கையில் வெளியான, பொலிஸ் நிர்வாகத் தொடர்பான முக்கிய வார சுழற்சி ஆவணங்களுள் ஒன்று. இவ் ஆவணங்கள்

பொலிஸ் அறிவிப்புகள், அந்தக் காலத்தில் இருந்த சமூகப் பாதுகாப்பு, Policy நடைமுறை மற்றும் Administration பற்றிய நேரடி பார்வையை வழங்குகின்றன.

- ஜான் அபெர்கிராம்பி அலெக்சாண்டர் 1886 முதல் 1896 வரை இலங்கையில் வசித்தவர். இவரது சேகரிப்பில் உள்ள படங்கள் அவரது கால கட்டத்தில், அவர் பணி மற்றும் தனிப்பட்ட ஆர்வத்தின் அடிப்படையில் சேகரிக்கப்பட்டவையாகும்.அவரது தொகுப்பில் காலனித்துவ வேளாண்மை மற்றும் தொழிலாளர் வாழ்க்கை ,தாவரவியல் மற்றும் இயற்கை நிலப்பரப்புகள்,பேராதனை தாவரவியல் பூங்கா ஆவணம் ஆகிய மூன்று முக்கியப் பிரிவுகள் காணப்படுகின்றன. இப் புகைப்படங்கள் அலெக்சாண்டரின் தொழில்முறைப் பொறுப்புகள் (வனத்துறை), அவரது தனிப்பட்ட ஆர்வம் (தாவரவியல்) மற்றும் அவர் வாழ்ந்த காலனித்துவ இலங்கையின் சமூக-பொருளாதார யதார்த்தங்கள் ஆகியவற்றைப் பற்றிய நேரடிச் சான்றுகளை வழங்குகின்றன.

- 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ அல்லது 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ (குறிப்பாக 1886 ஆம் ஆண்டில்) பிரிட்டிஷ் சிலோனால் வெளியிடப்பட்ட ஒரு சிறப்பு வகை முத்திரைகளும் நாணயங்களும் விளங்குகின்றன.இவை, விக்டோரியா மகாராணியின் உருவப்படத்தைக் கொண்டுள்ளதுடன், அஞ்சல் சேவைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன.மேலும் இந்த முத்திரைகள், உள்நாட்டு அஞ்சல் சேவைக்காகவும், குறைந்த தூர கடிதப் போக்குவரத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டன.இது அக்காலகட்டத்தில் இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான அஞ்சல் தொடர்பின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.

- பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ், 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வரையப்பட்ட வரைபடங்கள் இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பையும் புவியியல் கூறுகளையும் எடுத்தியம்புகின்றன. இவை நிர்வாகம், வணிகம் மற்றும் பொதுவான புவியியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அடைவுகள் (2025)

| இல | ஆவண வகை | அடைவுகள் |
|---|---|---|
| 1 | நூல்கள் | **2** |
| 2 | பத்திரிகைகளும் இதழ்களும் | **69** |
| 3 | பல்லூடக ஆவணகம் | **103** |
| 4 | அறிக்கைகள் | **1,529** |
| | மொத்தம் | **1,704** |

அடைவுகள் வருடாந்த ரீதியாக

| | வருடம் | அடைவு |
|---|---|---|
| 1 | **2020** | **251** |
| 2 | **2021** | **368** |
| 3 | **2022** | **999** |
| 4 | **2023** | **812** |
| **5** | **2024** | **1,602** |
| 6 | **2025** | **1,704** |
| | மொத்தம் | **5,716** |

எதிர்கொண்ட சவால்கள்

.

- 1900 இற்கு முற்பட்டு வெளிவந்த தமிழ் மற்றும் ஆங்கிலம் தவிர்ந்த பிறமொழி ஆவணங்களில் இலங்கை பற்றிய குறிப்புகள் காணப்படும் போதும் குறிப்பிட்ட மொழிகள் தொடர்பான விளக்கமின்மையால் அவற்றை ஆவணப்படுத்தல் கடினமாக உள்ளது.
- பெறப்படும் ஆவணங்களில் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரமே ஆவணப்படுத்தக் கூடியதாக இருந்தது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இச்செயற்றிட்டம் தவிர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் ஏனைய நூலக செயற்றிட்டங்கள் மூலம் கண்டறியப்படும் 1900 இற்கு பிற்பட்ட ஆவணங்களையும் இச்செயற்றிட்டத்துடன் இணைத்தல்.
- நூலகங்களுக்கிடையே மிக வலுவான தொடர்புகளை ஏற்படுத்தல். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள நூலகங்களிடையே வலுவான தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலமாக 1900 இற்கு முன்னைய ஆவணங்கள் தொடர்பான விபரங்களை பெற முடியும்.
- ஏனைய செயற்றிட்ட கள ஆய்வாளர்களின் உதவியுடன் ஆவணங்களை சேகரித்தல்.

முடிவுரை

முன்னோர் ஆவணக செயற்றிட்டம் இலங்கையின் 1900க்கு முன் வெளிவந்த அனைத்து வகையான ஆவணங்களையும் பாதுகாப்பது, அடையாளம் காண்பது மற்றும் எண்ணிமப்படுத்துவது முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

2020–2025 காலத்தில்:

- 583 நூல்கள்
- 1,147 பத்திரிகைகள் மற்றும் இதழ்கள்
- 143 பிரசுரங்கள்
- 3,924 அறிக்கைகள்
- 6 சிறப்பு மலர்கள்
- 127 பல்லூடக ஆவணங்கள்

எல்லாம் நூலக வலைத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணங்கள் இலங்கையின் தமிழ் பேசும் சமூகத்தின் வரலாற்றுத் தளத்தில் முக்கியமான ஆதாரங்களை வழங்குகின்றன.

பின்னிணைப்பு

இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல்

பல்லூடக ஆவணகத்தில் முன்னோர் ஆவணகம் தொடர்பான மேலதிக ஆவணங்கள்